The Cherian FOUNDATION

13th ஆண்டு நிறைவு

ஃபவுண்டேஷன் நிறுவிய நாள்: 11.03.2003

RAJ HOLDINGS

# எதிர்காலம் வளம் பெற மாற்றங்கள் புரிவோம்

ஜனவரி - டிசம்பர் 2016 செய்திமடல் | இதழ் : 5

இந்த செய்தி மடல் ராஜ் குடும்ப உறுப்பினர்களுக்கும், ஆதரவாளர்களுக்கு மட்டுமே

## தி செரியன் ஃபவுண்டேஷன் இயக்குநர் உரை



செரியன் ∴பவுண்டேஷனின் பங்காளர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும் எனது மனமார்ந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். எங்கள் ∴பவுண்டேஷனில் சென்ற ஆண்டு முழுவதும், நடைப்பெற்ற எல்லா திட்டத்திற்கும் தாங்கள் அளித்த மேலான ஆதரவினால் சிறப்பாக செயல்படுத்த முடிந்தமைக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு, நாங்கள் "ராஹா (RAHA)" என்ற நீண்ட கால திட்டம் ஒன்றினை தொடங்கியுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கீமோதெரபி சிகிச்சையின் போது முடி இழக்கும் புற்று நோயாளிகளின் தாழ்வு மனப்பான்மையை குறைக்க, உதவுவதே, இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்கள், அந்நோய்க்கு எதிராக போரிடுவது மிக பெரிய சவால் ஆகம். அதிலும் தலை முடி இழப்பு உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் அவர்களை பாதிக்கும். எனவே, தி செரியன் ∴பவுண்டேஷன் மற்றும் ராஜ் ஹேர் இன்டர்நேசனல் கம்பெனியும் சேர்ந்து, அவர்கள் வாழ்வில் புன்னகை மலர இத்திட்டத்தை செயல்படுத்துகிறோம். இத்திட்டத்தை பற்றிய விவரங்களை இந்த இதழில் கொடுத்துள்ளேன். உங்கள் ஆதரவை தொடர்ந்து வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு
**வல்சா பெஞ்சமின் செரியன்**
இயக்குநர், தி செரியன் ∴பவுண்டேஷன்

எங்களது ஐந்தாவது பதிப்பை படித்து மகிழுங்கள்!

# முன்னோட்டம் 2016

கல்வி உதவி தொகை





சிறார் விளையாட்டு பொருட்கள்

சுகாதார மையத்திற்கு உபகரணங்கள்



வெள்ள நிவாரண பணி



TANGLED திட்டம்



கல்வி உதவி தொகை





மருத்துவ முகாம்

# தி செரியன் ஃபவுண்டேஷனை பற்றி!

**செயல்நோக்கு அறிக்கை:** தரமான கல்வி, அடிப்படை ஆரோக்கியம், விழிப்புணர்வு மற்றும் சமூதாய பங்களிப்பின் மூலமாக, ஒரு ஆரோக்கியமான மற்றும் சமூக உணர்வுள்ள சமுதாயத்தை உருவாக்குதல்

சென்னையில் அமைந்துள்ள தி செரியன் ∴பவுண்டேஷன், 2003 ஆம் ஆண்டு முதல் சமூக சேவையை ஆற்றிவரும் ஒரு தனியார் தொண்டு நிறுவனம். இந்நிறுவனத்தின் நோக்கம், "அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய வாய்ப்புகள் இல்லாதவர் களுக்கு வாய்ப்புகளை அமைப்பதே" ஆகும். அவர்கள் வாழ்வில் ஆரோக்கியம் மற்றும் திறன்களை அதிகரிக்க செயல்பட்டு வருகிறது.

ராஜ் ஹோல்டிங்ஸ் பணி இடங்களை சுற்றி அமைந்துள்ள பகுதியில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு குறிப்பாக குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு பல நல் திட்டங்களை செயல்படுத்துகிறது. நமது சேவையை விரிவாக்க, RI Dist 3230's Centenary Charitable Trust, Madras Midtown Round Table (MMRT-42), லேடீஸ் சர்கிள் 4 மற்றும் 7, அடையாறு புற்றுநோய் மருத்துவமனை போன்ற நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுகிறது. நமது மூன்று முக்கிய அம்சங்களாவது:

- **கல்வி உதவி**
- **அடிப்படை ஆரோக்கியம்**
- **விழிப்புணர்வு மற்றும் சமூதாய பங்களிப்பு**

மேலும், கூட்டாண்மை சமூக பொறுப்பு பிரிவாகவும் செயல்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல் ராஜ் குளோபல் ஹோல்டிங்கில் பணியாற்றும் அனைத்து பணியாளர்களும் சமூக சேவை செய்ய அடித்தளமாக விளங்குகிறது.

மேலும் விபரங்கள் www.cherianfoundation.org என்ற எங்கள் இணைய தளத்தில் அறிந்துக் கொள்ளலாம், அல்லது 044-40404444 என்ற தொலை பேசியில் சார்லஸ் (திட்ட ஒருங்கிணைப்பாளர்) என்பவரிடம் அறிந்துக் கொள்ளலாம்.

# கல்வியறிவு

## கல்வி உதவி தொகை

இவ்வாண்டு 40 விண்ணப்பங்களை பெற்றோம். இதில் 95 சதவீதத்திற்கு மேல் மதிப்பெண்கள் பெற்ற 14 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர் ராஜ் ஹோல்டிங்ஸ் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் போது இவர்களுக்கு கல்வி உதவி தொகை (மொத்தம் ரூ.18,000.00) மற்றும் பரிசு பொருட்களும் வழங்கப்பட்டது.




பயனாளிகளுடன் இயக்குநர் மற்றும் அறங்காவலர்கள்


மேலும், 2014-ம் ஆண்டு, சமூகத்தில் பின் தங்கிய மாணவர்களின் கல்வி உதவி பெற திரு. நதிர் கென்டி அவர்கள் €. 1,895.00 நன்கொடையாக வழங்கினார். இத்தொகையை கனரா வங்கியின் நிலையான வைப்பில் (Fixed Deposit) டெபாசிட் செய்யப்பட்டது. இதன் மூலம் கிடைத்த வட்டித் தொகையை கொண்டு மூன்று மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கினோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

1) **மாணவியின் பெயர்:** கலையரசி
**பயிலும் வகுப்பு:** 11 ஆம் வகுப்பு
**மதிப்பெண் விவரம்:** 309/500
**தந்தை பெயர்:** ஐயப்பந்தாங்கல் (லேட்)
**தாய் பெயர்:** நவநீதம்
**தொழில்:** ஹாவுஸ் கீபிங்
**பள்ளியின் பெயர்:** குண்டூர் சுப்பையா பிள்ளை பள்ளி
**பெற்ற உதவி தொகை:** ரூ. 3,990.00

2) **மாணவியின் பெயர்:** ம. தீபிகா
**பயிலும் வகுப்பு:** 7 ஆம் வகுப்பு
**மதிப்பெண் விவரம்:** 478/500
**தந்தை பெயர்:** S. மணிகண்டன் (லேட்)
**தாய் பெயர்:** D. வாணி
**தொழில்:** வீட்டு வேலை
**பள்ளியின் பெயர்:** குண்டூர் சுப்பையா பிள்ளை பள்ளி
**பெற்ற உதவி தொகை:** ரூ. 800.00



இயக்குநர் மற்றும் அறங்காவலர் - பயனாளிகளுடன்



From— Phone : 24345167
Dr. Rs. RAJALAKSHMI,
M.Sc (Zoo, G & C)., M.Ed., M.Phil (M.Bio & Edu)., Ph.D.,
Headmistress
Guntur Subbiah Pillai Theagaraya Nagar
Girls' Higher Secondary School
35, VENKATNARAYANA ROAD,
T. NAGAR, CHENNAI - 600 017.

To
The Director,
The cherian foundation,
T.Nagar, chennai – 17.

Sir / Madam

Dated 10.08.2016

Sub :

Respected Madam,

Whole heartedly I thank you madam, that you are extending continuous support for our school students, M.Deepika ( VII Std) and I.Kalaiarasi (XI Std) by giving them Rs.800 and Rs.3990 respectively to continue their studies without dropout.This is very helpful & motivate these students to study & improve in their academic performance.

Thanking You,

Yours faithfully,
R.R. Lakshmi
10.8.16
HEADMISTRESS
GUNTUR SUBBIAH PILLAI
T.NAGAR GIRLS' HR. SEC. SCHOOL,
CHENNAI - 600 017.

பள்ளி நிர்வாகத்தின் நன்றி கடிதம்

3) பிறக்கும் போதே தாயாரை இழந்த மிஸ் ரம்யா அம்பத்தூர் அருகே உள்ள சோகா இக்கெட பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பி.எஸ்சி கம்ப்யூட்டர் சயின்ஸ் மூன்றாம் ஆண்டு படித்து வருகிறாள். அவளது மாற்றாந்தாயின் சித்திரவதையினாலும் அவளது தந்தை கல்லூரி கட்டணம் செலுத்த விரும்பம் இன்மையினாலும், தனது படிப்பை இடையில் நிறுத்தி விட்டு, வீட்டி வேலை செல்ல வேண்டிய சூழலில் உள்ளார். தற்பொழுது, அவள் கல்லூரி விடுதியில் தங்கியுள்ளார். அவளது தந்தை பெங்களூரில் வசித்து வருகிறார். கல்வியில் சிறந்து விளங்கும் மாணவி ரம்யா இவ்வாண்டு, கல்லூரி தலைவியாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
அவள் கல்லூரி படிப்பை இனிதே முடிக்க ரூ. 2,500.00 கல்வி உதவி தொகை வழங்கப்பட்டது.

**இம்மாணவிகளுக்கு கல்வி உதவி புரிந்த திரு. நாதிர் கென்டி அவர்களுக்கு எமது உளமார்ந்த நன்றிகள்**

மேலும், கல்லூரி கல்வி கட்டனைம் செலுத்த உதவும் வகையில் பொருளாதாரத்தில் பின் தங்கிய குடும்பத்தை சார்ந்த இரண்டு மாணவிகளுக்கு தலா ரூ. 5,000 வழங்கப்பட்டது.

**1. க. மோகனபிரியா**, த/பெ. கந்தசாமி (தோட்டக்காரர்), நர்சிங் டிப்ளமோ படித்து வருகிறாள்

**2. திவ்யா**, த/பெ. ராஜேஸ்வரி (வீட்டு வேலை). பி.காம் இறுதி ஆண்டு படித்து வருகிறாள்.



பயனாளிகளுடன் அறங்காவலர்கள்

**இம்மாணவிகளுக்கு கல்வி உதவி புரிந்த ரோட்டேரியன் நமசிவாயம் அவர்களுக்கு எமது உளமார்ந்த நன்றிகள்**

### எழுத்தறிவு திட்ட வகுப்புகள்

இந்த திட்டத்தின் மூலம், அழிஞ்சிவாக்கத்தில் 20 பெண்களும் மற்றும் முகப்பேரில் 10 பெண்களும் பயனடைந்தனர். அவர்களின் கல்வி முன்னேற்றத்தை அறியும் வகையில் முறைப்படி தேர்வுகள் நடத்தப்பட்டன. தற்போது இவர்கள் எழுத, படிக்க மற்றும் பணி இடத்தில் உள்ள கோப்புகளை பராமரிக்கவும் செய்கிறார்கள்.



அழிஞ்சிவாக்கத்தில் நடைப்பெற்ற தேர்வு

### எழுத்தறிவு திட்டத்தில் சிறந்து விளங்கியவர்கள்

அழிஞ்சிவாக்கத்தில் 10 பெண்களும் மற்றும் முகப்பேரில் 8 பெண்களும் எழுத்தறிவு தேர்வுகளில் நல்ல மதிப்பெண்களை பெற்றனர். இவர்களுக்கு கிறிஸ்துமஸ் கொண்டாட்ட நிகழ்ச்சியின் போது சான்றிதழ்களும், பரிசுகளும் வழங்கப்பட்டது.



சிறந்து விளங்கிய எழுத்தறிவு திட்ட பயனாளிகள்

### குண்டூர் சுப்பையா பள்ளியில் மின் கற்றல் கிட்டின் செயல் விளக்கம்:

கல்வியின் தரத்தை உயர்த்தவும், நடைமுறை மொழியில் பயிலவும், பாடத்திட்டத்தின் அடிப்படையில் காட்சி வாயிலாக மாணவர்களுக்கு பாடங்களை புரிந்து கொள்ள, சிந்திக்க, ரோட்டரி இந்தியாவின் எழுத்தறிவு மிஷனின் ஒரு முயற்சியான மின் கற்றலின் நோக்கமாக உள்ளது. தமிழ்நாடு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளியின் "சமசீர் கல்வி" பாடத்திட்டத்தின் அடிப்படையில் மின் கற்றல் பாடங்கள் உள்ளன. செப்டம்பர் 21, 2016 - அன்று குண்டூர் சுப்பையா பள்ளியில் பயிலும் 11-ம் வகுப்பு மாணவிகளுக்கு மின் கற்றல் கிட்டின் செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும், தி செரியன் ஃபவுண்டேஷன் இயக்குநர் அவர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடி கருந்துகளை கேட்டறிந்தார்.



மின் கற்றல் கிட்டின் செயல் விளக்கம்

## சுகாதார பராமரிப்பு

### ஆரம்ப சுகாதார மையத்திற்கு உபகரணங்கள்

•அறங்காவலர் திருமதி சாரா B. செரியன், பஞ்செட்டி கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார மையத்தின் மருத்துவ வசதி தேவைகளை பூர்த்தி செய்ய மெட்ராஸ் மைலாப்பூர் லேடீஸ் சாக்கிள் (MMLC) 4-க்கு கேட்டுக் கொண்டார். இக்கிளப் ரூ. 81, 00, 000 . 00 நன்கொடையாக வழங்கியது.

MAKE A DIFFERENCE TOGETHER
AREA 2 2016-17
MMLC 4



மருந்துகளை வைக்க ஸ்டொபிளைசருடன் பிரிஜ்

இந்நன்கொடை, பின்வரும் மருந்துவ உபகரணங்களை வாங்க உறுதுணையாக இருந்தது.

- ஈசிஜி இயந்திரம்
- பிபீ கண்காணிப்பு கருவி
- நாப்கின்களை அழிக்கும் கருவி
- லேபர் வார்டில் மருந்துகளை வைக்க ஸ்டொபிளைசருடன் பிரிஜ்

MMLC 4-ன் தலைவி சர்குலர். பலக் சோர்டியா அவர்கள் சர்கிளர். நிக்கி, மற்றும் சர்கிளர். சாரா அவர்களுடன் ஜுன் 27, 2016-ம் தேதியில் பஞ்செட்டி சுகாதர நிலையத்திற்கு வருகை தந்து, மேற்கூறிய மருந்துவ உபகரணங்களை நன்கொடையாக வழங்கினார்.




MMLC #4 தலைவர் அவர்கள் முதன்மை டாக்டரிடம் வழங்குதல்

இந்த உன்னத நோக்கத்திற்கு நன்கொடை வழங்கிய MMLC #4 தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு எமது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

## கண் புரை அறுவை சிகிச்சை:

2012-ஆம் ஆண்டில், நமது ஃபவுண்டேஷன் பம்மலில் அமைந்துள்ள சங்கரா கண் மருத்துவமணையின் அறக்கட்டளை நிதிக்கு ரூ. 10,000.00 நன்கொடையாக வழங்கியது. இந்நிதியில் கிடைக்கும் வங்கி வட்டியின் மூலமாக ஒவ்வொரு ஆண்டும் ஆதரவற்றோருக்கு இலவச கண் புரை அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. இவ்வாண்டு, திரு. ஜெயபால் அவர்களுக்கு இலவச கண் புரை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.



**SANKARA EYE HOSPITAL**

No. 1, Third Cross Street, Sri Sankara Nagar,
PAMMAL, CHENNAI - 600 075.
Website: www.kannoli.net / E-mail: info@kannoli.net
☎ 044- 2248 4799, 2248 5299, Fax : 044 - 2248 3750.

ISO 9001 CERTIFIED


Trustees : Rtn. B. P. Jain, FCA, Dr. P. Janakiraman, Dr. R. V. Ramani, Sri S. Visvanathan, Sri V. Lakshmanan, Sri Jagdish M. Chanral, Wg Cdr V Shankar (Retd

Our Patrons : Sri V.G. Raghavan, Sri N.R. Chandran, Sri T.R. Rajagopalan, Sri Jain Dhaval J. Chandan, Sri Mangal Chand Tater


SEH/2016/DONATION-INFO

April 01, 2016

To

M/s.Cherian Foundation,
No.38, Maloniy Road,
T.Nagar,
Chennai – 600 017.
Ph: 4204 3035 / 36.

Respected Sir/Madam,

Sub: KANNOLI – VISION SAVER FREE CATARACT SURGERY.

We have performed FREE cataract surgery with IOL for **one patient** utilizing the interest accrued by your endowment.

| Name & Address | Age/Sex | D O S | Eye Operated |
|---|---|---|---|
| Sri. Jayapal.M, (MRD No. 358521) S/o Munnaiah, No: 5-67,Reddy Gunta, Arupalli, Chittoor, AP. | 52/M | 31.03.16 | Left Eye |

He is extremely happy and the vision restoration is good. We once again thank you for your assistance. We have enclosed one copy of our appeal to you for strengthening our corpus fund. We welcome you, your relatives and friends to visit our hospital and encourage us in our "KANNOLI PROJECT".

Thanking You,

For Sankara Eye Hospital,

(J.BABU)
General Manager
94443-80698

**Note: Whenever you change the address please intimate.**
**Please furnish your email-id also**

SEH / L.H. / 01/ 03 -16

சங்கரா கண் மருத்துவமனையிருந்து வந்த கடிதம்

## பொது மருத்துவ முகாம்:

டாக்டர் பிரக்னா மற்றும் டாக்டர் அனிஷா உதவியுடன், ஏப்ரல் 09, 2016 அன்று முகப்பேரில் பொது மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமின் மூலம் 74 பணியாளர்கள் பயனடைந்தார்கள். இதில் 36 பணியாளர்கள் சர்க்கரை பரிசோதனை, கண் பரிசோதனை, தைராய்டு பரிசோதனை, போன்ற மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டனர்.



பணியாளர்களை பரிசோதிக்கும் Dr. பிரக்னா & Dr. அனிஷா



அலுவர்கள் பணியார்களின் விவரங்களை பதிவு செய்தல்

**மருத்துவ முகாமை சிறப்பாக நடத்திய டாக்டர் பிரக்னா மற்றும் டாக்டர் அனிஷா அவர்களுக்கு எங்களது உளமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.**

## புற்றுநோய் கண்டறியும் மருத்துவ முகாம்

பேமிலி பிளானிங் அசோஸியேஷன் ஆப் இந்தியாவின் மருத்துவ குழுவின் உதவியுடன் கருப்பைவாய் புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை அழிஞ்சிவாக்கத்தில் டிசம்பர் 1, 2016 அன்று நடைபெற்றது. 35-45 வயதிற்குட்பட்ட 30 பெண்கள் இம்முகாமில் மருந்துவ பரிசோதனையில் பங்கேற்றனர். இதில், 20 பெண்கள் இரத்த மற்றும் சர்க்கரை பரிசோதனை செய்ய இ.எஸ்.ஐ. மருந்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டனர். இவர்களில் எவருக்கும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயின் அறிகுறிகள் மற்றும் பாதிப்புகள் காணப்படவில்லை.




பயனாளிகள் மருத்துவ அறிக்கையும் மற்றும் இலவச மருத்துக்களை பெறுதல்

**பேமிலி பிளானிங் அசோஸியேஷன் ஆப் இந்தியாவின் மருத்துவ குழுவினர் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள். மேலும், இம்முகாமை ஒருங்கிணைத்த திருமதி ஜோதி காசி விஸ்வநாதன் அவர்களுக்கும் எங்களது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்**

## சுற்றுசூழல் பாதுகாப்பு முயற்சி

எழுத்தறிவு பயிலும் பணியாளர்களின் உதவியுடன் அழிஞ்சிவாக்கத்தில், சானிடரி நாப்கின்களை சரியான முறையில் அப்புறப்படுத்த, காகித பைகளை உருவாக்கினோம். இக்காகித பைகள் அனைத்தும் கழிப்பறையில் வைக்கப்பட்டுள்ளன. தேவைகளுக்கு ஏற்ப தொடந்து காகித பைகளை செய்து வருகிறார்கள்.




பழைய செய்திதாளில் செய்யப்பட்ட காகித பை

# சமுதாய பங்கேற்பு

## கீழார்க் கொல்லை மற்றும் தென்பட்டினம் கிராமத்தில் வெள்ள நிவாரண பணிகள்

டிசம்பர் 2015-ல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் நிவாரணப் பொருட்கள் கொண்ட கிட் தயரித்தோம். ஒவ்வொரு கிட்டிலும் உள்ள பொருட்கள்: 5 கிலோ அரிசி, 1 கிலோ பருப்பு மற்றும் 5 குளியல் சேப். கீழார்க் கொல்லை உள்ள குடும்பத்திற்கு ஜனவரி 3, 2016 மற்றும் தென்பட்டினம் கிராமத்தில் உள்ளவர்களுக்கு ஜனவரி 9, 2016 அன்றும், இந்நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டது. இதன் மூலம் 377 குடும்பங்கள் பயனடைந்தார்கள்.


அறங்காவலர்கள் பயனாளியுடன் கலந்துரையாடுகிறார்


வெள்ள நிவாரண பொருட்களை வழங்குதல்

## ராஹா திட்டம்

Raha

ராஜ் ஹோர் இன்டர்நேசனலின் ஒரு சமூக முயற்சியே ராஹா திட்டமாகும். இத்திட்டத்தின் மூலமாக புற்று நோயாளிகளில் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கு நல்ல தரமான விக்கை இலவசமாக வழங்குவதே இதன் நோக்கமாகும்.

இதை தவிர ராஜ் ஹோர் இன்டர்நேசனல் ஒரு விக் செய்வதற்கான தொகையை குறைத்து இத்திட்டத்திற்கு வழங்குகிறது. எங்களது அலுவலகத்தில் நீங்கள் முடியை நன்கொடையாக வழங்குவதன் மூலம் இத்திட்டத்தில் பங்கேற்கலாம்.

**முடியை நன்கொடையாக வழங்க கீழ்கண்ட வழிகளை பின்பற்றவும்:**

- முடியை வெட்டும் முன்பு, 8 இன்சிற்கு மேல் ஒரு ரப்பர் பேண்ட் போடட்ட, பின்பு வெட்டவும்.
- அல்லது உங்கள் தலை முடி அழகு குறையாமல் முடியின் ஒரு பகுதியை நிருபுணர்கள் உதவியுடன் வெட்டலாம்.

**குறிப்பு:** டை மற்றும் செயற்கை ரசாயன பொருட்கள் பயன்படுத்தாத முடியை நன்கொடையாக வழங்கவும்.

**இத்திட்டத்தை தி செரியன் ∴பவுண்டேஷன் ராஜ் ஹோர் இன்டர்நேசனலுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தும்**

## ராஹாவின் சுய உதவி திட்டம்

நகர்ப்புற மற்றும் கிராமப்புற ஏழை பெண்களுக்கு முதலீடு இல்லாத வருவாய் பெறும் வகையில் ராஹாவின் சுய உதவி திட்டம் உதவுகிறது. தலைவாரும் பொழுது உதிர்ந்து விழும் முடிகளை சேமிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள். சேமித்த முடிகளை கிலோ ஒன்றுக்கு ரூ. 1,500-க்கு ராஜ் ஹோர் இன்டர்நேசனல் வாங்கி கொள்கிறது. இதில் கிடைக்கும் நிதியினால் ராஹா திட்டம் செயல்படுகிறது.

## Tangled திட்டம்:

ஏழை புற்று நோயாளிக்கு விக் வழங்க, பெண்கள் கிறிஸ்துவ கல்லூரியின் ரோட்ராக்ட் குழுமம் மற்றும் கிரீன் ட்ரென்ட்ஸ் இணைந்து முடிதான நிகழ்ச்சியை நடத்தியது. இத்திட்டத்தில் ராஜ் ஹோர் இன்டர்நேசனல் நன்கொடை முடிகளை விக்குளாக தயாரிக்கிறது. நிதி திரட்டவும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அதிகார பூர்வமாக வெளி நாடுகளிலிருந்து நன்கொடை பெறவும், நமது தி செரியன் ∴பவுண்டேஷன் இத்திட்டத்தில் செயல்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு நடைப்பெற்ற முடி தான வழிப்புணர்வு நிகழ்ச்சியின் மூலம் கிடைத்த முடியினை கொண்டு புற்று நோயாளிகளுக்கு 250 விக்குகள் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக, ரூ. 5 லட்சத்தை ராஜ் ஹோர் இன்டர்நேசனல் மற்றும் தி செரியன் ∴பவுண்டேஷன் நன்கொடையாக வழங்கியுள்ளது. விக்குகள் தயாரிக்க, பெருமளவில் நிதி வழங்கிய அறங்காவலர் திரு. ஜார்ஜ் B செரியன் மற்றும் இயக்குநர் திருமதி. வல்சா பெஞ்சமின் செரியன் அவர்களுக்கும் எங்கள் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும், நன்கொடை வழங்கிய திரு S பாலாஜி, திரு TV சுப்பிரமணியன், திருமதி கல்யாணி அவர்களுக்கும் எங்களது பாராட்டுக்கள்.



புற்றுநோய் நோயாளிகளுக்கான விக்

## குழந்தை காப்பகத்திற்கு பொம்மைகள் நன்கொடை

அறங்காவலர் திருமதி சாரா B செரியன் அவர்கள் அழிஞ்சிவாக்கத்தில் உள்ள குழந்தைகள் காப்பகத்திற்கு பொம்மைகள் நன்கொடையாக வழங்கினார். இக்காப்பகத்தில் 12 குழந்தைகள் மகிழ்ச்சியோடு விளையாட்டு பொருட்களை பெற்றுக் கொண்டனர்.


காப்பக குழந்தைகளுடன் இயக்குநர் மற்றும் அறங்காவலர்

## வருடாந்தர நிதி திரட்டும் நிகழ்ச்சி

**CHARITY BAZAAR**

**வீட்டை தூய்மையாக வைக்க,
மற்றவர்கள் வாழ்வில் புன்னகை உருவாக்க**

இந்த திட்டம் "புதியது அல்லது மிதமாக" பயன்படுத்திய பொருட்களை நன்கொடையாக வழங்க உதவுகிறது. நன்கொடையாக பொருட்கள் வழங்குவதன் மூலம் நமது ஃபவுண்டேஷனின் நிதி திரட்டுவதில் முக்கிய பங்கேற்பு அடைகிறார்கள் என்பதை பெருமையுடன் தொவித்துக் கொள்கிறோம். பிப்ரவரி மாதத்தில் இத்திட்டம், தி. நகர், அழிஞ்சிவாக்கம், முக்பேர் மற்றும் கொப்பலிலும் சிறப்பாக நடைபெற்றது. இதன் மூலமாக ரூ. 1,71,573.00 நிதி திரட்டப்பட்டது. நன்கொடை வழங்கியவர்களுக்கும், குறிப்பாக அறங்காவலர்களுக்கும் எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.



இத்தொகையை கீழாக் கொல்லையில் உள்ள பள்ளியை சீரமைக்க உதவும் வகையில், தற்பொழுது வங்கியின் நிலையான வைப்பில் (Fixed Deposit) வைத்துள்ளோம்.

## அடையார் புற்றுநோய் மருந்துவமனைக்கு உதவும் வகையில் Charity Bazaar

இவ்வாண்டு, அடையார் புற்றுநோய் மருந்துவமனையில் சிகிச்சை பெறும் குழந்தைகளுக்கு ஒரு பூங்கா அமைக்க MMLC 4 உடன் இணைந்து கூடுதலாக Charity Bazaar நடத்தி வருகிறோம். இப்பூங்கா அமைக்க ரூ. 12, 50, 000. 00 செலவாகும். இத்தொகையில

- புதிய விளையாட்டு பொருட்கள் வாங்குதல்
- விளையாட்டு திடலின் வெளிப்புறம் சுத்தம் செய்தல்
- குப்பை மற்றும் கழிவுகளை அகற்றுதல்
- தரை மட்டத்தை உயர்த்துதல்
- இயற்கை தோட்ட நிலவமைப்பு
- நோயாளிகளுக்கு கல் பெஞ்சுகள் அமைத்தல்

இப்பூங்கா அமைக்க ரூ 1,00,000.00 பங்களிப்பு தொகையை வழங்குகிறது. இப்பூங்கா பிப்ரவரி மாதம் 2017-ல் நிறுவப்படும்.

தற்போதைய பூங்காவின் நிலை

**நீங்கள் Charity Bazaar-க்கு எதை நன்கொடையாக வழங்கலாம்?**

புத்தகங்கள், டிவிடிகள், விளையாட்டு பொருட்கள், பொம்மைகள், மின் சாதனங்கள் மின்னணு உபகரணங்கள், பாத்திரங்கள், ஆடைகள், காலணிகள், படுக்கை விரிப்புகள், தலையணைகள், பைகள் போன்றவைகள்.

☑ **புதிய பொருட்கள்** ☑ **கெட்டு போகாத பொருட்கள்**

☑ **மிதமாக பயன்படுத்திய பொருட்கள்**

# TCF கொண்டாட்டம்

## 9வது மகளிர் தின விழா 2016

இவ்வாண்டின் தலைப்பு "**பெண்மையை கொண்டாடுவோம்**". இவ்விழாவில் ஸ்கில் குருகுலின் நிறுவனர் ரோட்டேரியன். வித்யா ரகு அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டு, பணியிடம் மற்றும் வீட்டு நிர்வாகம் இரண்டையும் சமநிலையில் கையாளுவதைப் பற்றி சிறப்பாக பேசினார். மேலும், அவர் ஆரோக்கியமான உணவு திட்ட முறையை பற்றியும் நவதானியத்தின் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துரைத்தார். திருமதி. ஹேமலதா அவர்கள் ஆடியோ விஷுவல் மற்றும் வார்த்தை விளையாட்டுப் போட்டிகளை நடத்தினார்.



சிறப்பு விருந்துனரின் கலந்துரையாடல்

## நமது நிறுவனம் தத்தெடுத்த இரண்டு பள்ளிகளில் கிறிஸ்துமஸ் விழா

**a) சமூக சேவா பள்ளியில்**

டிசம்பர் 22, 2015, அன்று இராணி மேரி கல்லூரி வளாகத்தில் உள்ள சமூக சேவா பள்ளியில் 30 குழந்தைகளுடன் கொண்டாடப்பட்டது.



இயக்குநர் மாணவர்களுக்கு கேக் வழங்குதல்

**b) ரோட்டரி மாதிரி பள்ளியில்**

181 மாணவர்களுக்கு டிசம்பர் 23, 2015 - அன்று கிறிஸ்துமஸ் கேக் வழங்கப்பட்டது. மாணவர்கள் கேரல் பாடல்கள் பாடி, தங்கள் வாழ்த்துதலையும், நன்றியையும் அறங்காவலர் களுக்கு தெரிவித்தனர்.



மாணவர்களின் சிறப்பு நடன நிகழ்ச்சி

# அறங்காவலர்களின் செய்தி

## திரு. பெஞ்சமின் செரியன், மேலாண்மை அறங்காவலர்



வருகிற மார்ச் 2017-ல் நடைபெற இருக்கும் ரோட்டரி தெற்காசியாவில் எழுத்தறிவு மாநாடிற்கு துணை தலைவராக செயல்ப்பட்டு வருகிறார். கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்துவதும், இந்திய மக்கள் அனைவரும் கல்வியறிவு அடைவதற்கான வழிமுறைகளை விளக்குவதும், இக்கல்வியறிவு மாநாட்டின் நோக்கமாகும்.

## திரு. ஜார்ஜ் B செரியன், அறங்காவலர்



ரோட்டரி மாவட்டம் 3230 மாநாட்டிற்கு இவர் தலைவராக பொறுப்பேற்றார். “உத்சவ்” என்ற தலைப்பில் பிப்ரவரி 6 மற்றும் 7 -ம் தேதியில் சென்னை வர்த்தக மையத்தில் சிறப்பாக நடத்தினார். இம்மாநாட்டில் ரோட்டரி மாவட்டம் 3230 உள்ள 1834 உறுப்பினர்கள் பங்கேற்றது முதற்சாதனை. அநேக சிறப்பு சாதனைகளில் ஒன்றாக, முதற்முறையாக இதில் ரோட்டரி எக்ஸ்போவை அறிமுகப்படுத்தியதே. இது பிப்ரவரி 5, 2016 அன்று நடிகர் திரு சரத் குமார் கலைமாமணி PDG எஸ்வி.ஆர்.எம்.இராமநாதன் முன்னிலையில், திறந்து வைக்கப்பட்டது. கல்வி, சுகாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் வாழ்க்கைமுறை போன்ற தலைப்பின் கீழ் 94 கண்காட்சி கடைகள் அமைக்கப்பட்டு நுட்பமான முறையில் ரோட்டரி எக்ஸ்போ 2016 நடைப்பெற்றது. மூன்று நாட்கள் நடைப்பெற்ற இந்த எக்ஸ்போவில் 10000 க்கும் மேற்பட்ட மக்கள் பார்வையிட்டனர்.

தற்போது, வருகிற மார்ச் 2017-ல் நடைபெற இருக்கும் ரோட்டரி தெற்காசியாவில் எழுத்தறிவு மாநாடு நடைப்பெறும் இடத்தின் நிர்வாகப் பொறுப்பில் உள்ளார்.



ரோட்டரி மாநாடு - உத்சவ் பங்கேற்றவர்கள்



மாலையில் நடைப்பெற்ற சர்வதேச நடன நிகழ்ச்சி



உத்சவ் கண்காட்சி



ரோட்டரி எக்ஸ்போ திறப்பு விழா




உடற்பயிற்சி காட்சியரங்கத்தில் அறங்காவலர்



ரோட்டரி எக்ஸ்போவில் பைக் கண்காட்சி

## திருமதி. சாரா B செரியன், அறங்காவலர்



திருமதி. சாரா B செரியன், அவர்கள் B & H எக்ஸ்போட்ஸில் வணிக வளர்ச்சி மேலாளாராக பொறுப்பேற்றுள்ளார். மேலும், Tangled திட்டத்தை முன்நின்று வழி நடத்துகிறார். அவர் மெட்ராஸ் மயிலாப்பூர் லேடீஸ் சர்கிள் 4-ல் இணைந்து, அடையாறு புற்று நோய் மருந்துவ மனையில் குழந்தைகளுக்கு பூங்கா அமைக்க நிதி திரட்டுவத்தில் முழு முயற்சியுடன் செயல்பட்டு வருகிறார்.

# முன்னோட்டம் 2016

ஜனவரி - டிசம்பர் 2016

The Cherian FOUNDATION

செய்தி மடல்

## எங்களது உளமார்ந்த நன்றிகள்

### ஆதரவாளர்கள்

- திரு. அரின் பிரம்மா
- திரு. நாதிர் கென்டி
- குண்டூர் சுப்பையா பெண்கள் பள்ளி
- டாக்டர் பிரக்னா மற்றும் டாக்டர் அனிஷா
- பேமிலி பிளானிங் அசோஸியேஷன் ஆப் இந்தியா
- சங்கரா கண் மருத்துவமனை
- திரு. நமசிவாயம்
- மெட்ராஸ் மயிலாப்பூர் டேடீஸ் சர்கிள் #4
- ஆரம்ப சுகாதார மையம், பஞ்செட்டி

### Charity Bazaar நன்கொடையாளர்கள்

- திருமதி. அனிதா ஸ்ரீநாத்
- திரு. ஆஸ்வின் & காஷிஷ்
- செல்வி. அர்ச்சனா
- திரு. கிறிஸ்டோபர் தேவபிரகாசம்
- செல்வி. திவ்யா ராம்பிரசாத்
- திருமதி. பக்ரியா கப்பாசி
- திருமதி. ஜெயஸ்ரீ மிட்டல்
- திருமதி. ஜவன்தி சிங்காரம்
- திருமதி. ஜோதி காசிவிஷ்வநாதன்
- திருமதி. பத்மா சந்திரன்
- திருமதி. பிரிமளா ராமசந்திரன்
- திருமதி. பங்கஜம் வாசுதேவன்
- டாக்டர் பிரக்னா மோகன்
- திருமதி. சரோஜினி அஜித்
- திருமதி. சாலினி வூரா
- திருமதி. ஷிவானி
- திரு. ஸ்ரீதர்
- திரு. டப்ரெஸ் ஹபீப்
- திரு. வாசுதேவ தாஸ்

**ஊழியர்களுக்கும் பணியாளர்களுக்கும் எங்களது நன்றிகள்**

RAJ HOLDINGS

RAJ GLOBAL HOLDING Pvt. Ltd.

RAJ HAIR INTL Pvt Ltd.

RAJ REDEF MEDIA Pvt. Ltd.

Raj Waterscape Properties Pvt. Ltd.

B & H EXPORTS

RAJ TRADING

### நன்கொடை விவரங்கள்

தங்கள் நன்கொடைகளை "The Cherian Foundation" என்ற பெயரில் காசோலை (Cheque) அல்லது வரைவோலை (Demand Draft) ஆக எடுத்து எங்களுக்கு அனுப்பலாம். தாங்கள் கொடுக்கும் நன்கொடைகள் அனைத்தும், வருமான வரி சட்டத்தின் 80 G பிரிவின் (u/s 80 G of the Income Tax Act vide Certificate No. DIT (E) No.2 (67)/03-04 கீழ் வரி விலக்கு பெறுகின்றன.

**வங்கி கணக்குடையவர் பெயர்:** The Cherian Foundation
**வங்கி பெயர் மற்றும் கிளை:** ICICI Bank, Teynampet
**கணக்கு வகை:** சேமிப்பு கணக்கு
**கணக்கு எண்:** 000101212525
**ஆர்டிஜிஎஸ்/என்இஎப்டி/ஐஎப்எஸ்சி குறியீடு:** ICIC00000001

### வெளிநாட்டினர் நன்கொடை விவரங்கள்:

**வங்கி கணக்குடையவர் பெயர்:** The Cherian Foundation
**வங்கி பெயர்:** The Cherian Foundation
**கணக்கு எண்:** 0917201009289
**ஐஎப்எஸ்சி குறியீடு:** CNRB0000917
**வங்கி கிளை:** தி. நகர் கிளை
**வங்கி முகவரி:** புதிய எண் 26, பழைய எண் 22, துரைசாமி சாலை, தி. நகர், சென்னை - 17
**கணக்கு வகை:** நடப்பு கணக்கு

வெளிநாட்டு நன்கொடையாளர்கள் நன்கொடை அனுப்பும் நடைமுறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

PLEASE INSTRUCT YOUR BANKERS TO REMIT THE AMOUNT IN USD TO JP Morgan Chase Bank, 270, Park Avenue, New York, NY-10017. U.S.A. Swift Code : CHAS US33

**Credit to Account :**
001-1395969 of Canara Bank,
International Division, Mumbai, India.
Swift Code: CNRBINBBBID

**For final credit to:** Canara Bank, T. Nagar Branch.
**Beneficiary Details:** The Cherian Foundation
**A/C Number:** 0917201009289

With instruction to send SWIFT MT 103 to Canara Bank, Foreign Department, CNRBINBBMFD.


### எங்கள் முகவரி

38, மெலோனி ரோடு, தி.நகர், சென்னை - 600 017
தொலைப்பேசி எண்: 044-4040 4444
மின்னஞ்சல்: projects@cherianfoundation.org
www.facebook.com/thecherianfoundation
www.cherianfoundation.org



### ஆசிரியர் குழு

திருமதி. வல்சா பெஞ்சமின் செரியன், இயக்குநர்
திருமதி. கரினா ஜார்ஜ் செரியன், அறங்காவலர்
திரு. விஜய் சார்லஸ் வெஸ்லி, திட்ட ஒருங்கிணைப்பாளர் TCF